உ

ஸ்ரீ சத்குருப்யோ நம:

திரிசிரபுரம் வரகனேரி

# ஸ்ரீ குழுமியாநந்த சுவாமிகள்

# நான்மணி மாலை

இஃது
திருநெல்லையம்பதிச் சிந்துபூந்துறை
தெக்ஷணாமூர்த்தியாசிரமவாசியும்
மேற்படி சுவாமிகளுடைய
சீடருமாகிய

**M. வேதநாயக சுவாமிகள்**
இயற்றியது.

திரிசிராப்பள்ளி S. P. G. காலேஜ் தலைமைத்
தமிழ்ப் பண்டிதர் நடுக்காவேரி
மகா-ள-ள-ஸ்ரீ வேங்கிடசாமி நாட்டாரவர்களால்
திருத்தஞ் செய்து

திரிசிராப்பள்ளி வரகனேரி ஜவுளி வியாபாரம்
and முனிசிபல் கவுன்சிலர்
மகா-ள-ள-ஸ்ரீ மதுரைநாயகம் பிள்ளையவர்கள்
வேண்டுகோளின்படி
பதிப்பிக்கப்பெற்றது.

திரிசிரபுரம்
...கம் அண்டு கோ, டாட்சன் பிரஸ்.

1917

092:38.21192
N17
172841

உ

ஸ்ரீ சத்குருப்யோ நம:

திரிசிரபுரம் வரகனேரி

# ஸ்ரீ குழுமியாநந்த சுவாமிகள்

# நான்மணி மாலை

இஃது

திருநெல்லையம்பதிச் சிந்துபூந்துறை

தெக்ஷிணாமூர்த்தியாசிரமவாசியும்

மேற்படி சுவாமிகளுடைய

சீடருமாகிய

**M. வேதநாயக சுவாமிகள்**

இயற்றியது.

திரிசிராப்பள்ளி S. P. G. காலேஜ் தலைமைத்

தமிழ்ப் பண்டிதர் நடுக்காவேரி

மகா-௱-௱-ஸ்ரீ வெங்கிடசாமி நாட்டாரவர்களால்

திருத்தஞ் செய்து

திரிசிராப்பள்ளி வரகனேரி ஜவுளி வியாபாரம்

and முனிசிபல் கவுன்சிலர்

மகா-௱-௱-ஸ்ரீ மதுரைநாயகம் பிள்ளையவர்கள்

வேண்டுகோளின்படி

பதிப்பிக்கப்பெற்றது.

திரிசிரபுரம்

ஜெகம் அண்டு கோ, டாட்சன் பிரஸ்.

1917

OFFICE OF THE REGISTRAR ... 4-OCT 1917 ... MADRAS

REGISTRAR OF BOOKS
4-OCT 1917
MADRAS.

# சாத்துக்கவிகள்.

---

உ

திருச்சிராப்பள்ளி S. P. G. காலேஜ் தலைமை தமிழ்ப் பண்டிதர்

நடுக்காவேரி

மகா-ா-ா-ஸ்ரீ மு. வேங்கடசாமிநாட்டார் அவர்கள்

இயற்றியது.

வெண்பா.

சீரார் சிராப்பள்ளித் தெற்கொருசா ராம்வரக
னேரி யினிதமர்ந்த நின்மலனும்—பாரோர்
புகழ்குழுமி யானந்த புண்ணியற்குத் தக்கா
ரகமகிழப் பைந்தமிழி னல். 1

நான்மணிமா லையொன்று நன்றௌிரச் சாத்தினனவ்
வான்மணியின் சீட மணியாவான்—பான்மணிகள்
கோத்தநூ லொத்த குணன்வேத நாயகப்பே
ராத்தனற வோனந்த ணன் 2

---

உ

இராமநாதபுரம் ஜில்லா ஆத்தங்குடி V. V. வித்தியாசாலை

தமிழாசிரியர் பிர்மஸ்ரீ M. சுப்பராம ஐயரவர்கள்

இயற்றியது.

குழுமியா னந்தனெனுங் கோமா னடிக்கு
வழுவிலா நான்மணி மாலை—விழுமிய
செம்மொழியாற் சூடினன் செய்யசிந்து பூந்துறைவாழ்
எம்வேத நாயக னே

---

வாதனு யாசமதாச் செய்தவனி மாட்டு
மற்றெந்த மதத்தினையும் மாட்டத்து விதத்தின்
போதநா டொறும்நல்கிப் புகழ்கொண்மா தவர்க்கு
புனிதவுரை பொழிதிறன்வாய் புங்கவன்றண் பூத்த
சீதனு ணொளிமாடந் தினகரன்கா றடுத்துத்
தேவர்புரந் தெற்றவெழு சிந்துபூந் துறைசேர்
வேதநா யகசாமி மேலவனே யெற்கு
மெய்க்குருவன் னுண்மலர்த்தாண் மிலைவன்முடி மிசையே 4

அன்னவன்ற னரியபுக ழறைகுவநன் கறிமோ
அருணைசெய் யாருயிர்ப்பா லளியிழைநல் லன்பன்
சொன்னலந்துன் தொன்மறைக டொகுத்துரையெண் டோமில்
சோதரதத் துவமணியாச் சூடிமகிழ் துறவோன்
பின்னமின்றிப் பிறர்க்குதவி பில்குமன்பின் பெட்பிற்
பெரிதுசெயும் பேற்றினைக்கொள் பெருமையுயர் பெரியோன்
மின்னுறும்பொன் வெண்மலராண் மேவியநா மேன்மை
மிகவமைந்து மிருதுகவி விரைவினிசை வேந்தே 5

வான்றுருவி யந்தமன வாஞ்சையுட னூ
மாண்புறநல் வந்தனைசெய் சாந்தியணி மாலன்
மீன்றுழவு தெண்டிரையின் வீங்கியுய ராசை
வீந்துகெட வெண்டிசையு மேந்தலுறு வேதன்
ஊன்றழுவி நிந்தியுட றூங்குமுறை யாக
வோங்கவுழன் மந்திமன மோய்ந்தவியெண் யோகி
நோன்புயர்வு தங்குமொளி தேங்குபரி பூர்ணம்
நூங்கமைவு பொங்கன்மிளிர் நுண்புகழ்கொள் வானே 6

இந்நூலி னியலிசைத்தற் கெழிலனந்தற் கேலா
தெனினுமியா னியன்றவரை யியம்புதற்கே யிசைந்தேன்
அந்நூலி னமரருய்ய வரியளித்த வமுதும்
அகவசுசி யறநீக்கு மத்துவித மான
இன்னூலிங் கெடுத்துரைக்கு பேரமுது மெவரும்
எண்குழுமி யானந்த னீயருளின் னமுதும்
அஃனூறு மலரியென வகத்தியன்சீ ராற்ற
வமைதமிழ்நன் கறையுரையி னமுதுமளைந் தற்றே 7

## வேறு

## இரதபந்தம்

கு

ங் ழு வா

கு ண மி ளி ர

ங் ரு நே யா மி ழு கு

மெ ய் ஞ் ஞா ன ங் கூ ட க்

ல ண கொ ண் தெ ங் ய் வா ர் ய டு

ர் வா ய் த் த க வே ர் வீ

சீ ன் யி னை ன் பி வி

மெ ய் க் க ல்

ழ் கூ ர்

டு

பீ ய

### வெண்பா.

பீடுயர்கூழ் மெய்க்கல்வி பின்னையின்சீர் வாய்த்தவேர்
வீடுயர்வாய்ந் தெண்கொணல மெய்ஞ்ஞானங்—கூடக்
குழுமியா நேருங் குணமிளிர வாழுங்
குழுமியா னந்தனைக் கூடு

# சிறப்புப்பாயிரம்

திருநெல்வேலி ஜில்லா நெட்ரேர் ஸ்தலபுராணமியற்றியவரும்
இந்நூலாசிரியரின் மாணுக்கரும்
நச்சநல்லூர் ரயிட்டர் பாலு நாயுடு அவர்களின் கனிஷ்ட புத்திரரும்
சிந்து பூந்துறை வாசரும்
பென்ஷன் போலீஸ் இன்ஸ்பெக்டருமான
B. B. நாராயணசாமி நாயுடு
இயற்றியது.

**எண்சீர்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.**

பொன்பூத்த புன்முறுவற் பூமாது பொலியும்
புயல்வண்ணன் பொருப்படிக்குப் புகழ்மீளப் புரந்த
தென்பூத்த தென்கலையே செகந்திகழ்பா டைகளிற்
சிறந்ததெனத் தெரியாரார் தீயுண்வெள் ளென்பும்
மின்பூத்த மின்னுருவா விளங்கியதும் வன்மீன்
விழுங்கியதோர் மெய்யனுயிர் மீண்டதுவு வேம்பன்
பொன்பூத்த கிழியறுத்த பொலனதுவும் பாம்பிற்
பொன்றியமென் புதல்வனுயிர் புணர்ந்ததுவுந்தேர்ந்தே 1

அக்கலையைச் சிக்கலற வாய்குதலு மரிதே
ஆய்ந்தாலு மமுதுகப்பா வாற்றுதலு மரிதே
சொக்கலையக் கவிபனினுஞ் சுகமுறப்பத் தித்தேன்
துளும்புதல்கொண் டுலகுவப்பச் சொல்லுதலு மரிதே
மிக்கலையப் பன்னபத்தி மேவவரைந் தாலு
மெய்த்தொண்டர் பணிவிடையே மேன்மையென வியந்து
பொக்கலையப் பக்குவமாப் புவிமகிழப் பொழிந்து
புகழ்கொள்ளும் பொலிவிலைவாய் பொற்பரிதி னரிதே 2

செழுமைசா லச்செவ்விச் செய்யவளந் தேக்குந்
திரிசிராப் பள்ளியண்மைத் தெய்வபத்தி சிறந்த
எழுமையே யெழிலியரு மிருடியரும் பிறரும்
இயைந்துறையு மெழில்வரக னேரிக்கண் ணின்பங்
குழுமவே வெறுக்கையினை குவலயத்தோர்க் கீந்து
கூன்மதிசேர் வான்றளியிற் கோயில்கொண் டருளுங்
குழுமியா நந்தனெனுங் கோமான்பொன் னடிக்கே
குணமமர்நான் மணிமாலை கூறினன்பேர் கேண்மோ 3

உ

திரிசிரபுரம் வரகனேரி

மகா-ா-ா-ஸ்ரீ தி. ம. பொன்னுசாமி பிள்ளை யவர்கள்

இயற்றியது.

## அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

நீர்வளமு நிலவளமு நீண்ட தருக்குலவளமு
நிறைந்தெனுளுந்
தார்மருவுஞ் செவ்வந்தி நாதனுறை சிரபுர
த்தின்தென்சானேரி
கார்மருவு சோலைசூழ் கங்கைநிகர் சர்ப்ப
நதிக்கரையின்பாங்கர்
பார்மகிழச் சித்திபுரி குழுமியா நந்தர்
கழற்பரவவேண்டி 1

சிந்து பூந்துறை வேத நாயகனைத்
தெரிந்தவர்தம் திறமையோர்ந்து
சிந்தைதனிற் சீடனுய்க் கடைக்கணித்
திங்குநீ வந்துபோவென்
றெந்தை கிலுக்குத்தடியெமேகன்
மனமிசைந்தமொழி சிரமேற்றூங்கி
வந்துபு நற் சித்தர்சமாதிக்கணுலயம்
வகுத்துவாகாய்வந்த 2

நற்றவர்கண் மெஞ்ஞானிஞதனடி
யவர்களுறைமாடம்புக்கி
பற்றுடனே தினம் பத்துப்பரங்கள்
பசியாறுதற்குப் பாங்காய்மேற்கொண்
டுற்றமகான் முதலியோர்க் குணவருத்தற்
குற்றநிலமுதவிநாத
னற்கமலத்தடிக்கணுன் மணிமாலைதனை
யணிந்தானுதன்மாதோ 3

உ

இராமநாதபுரம் ஜில்லா திருச்சுழித்தாலுகா இராமேஸ்வரம்
தேவஸ்தானம் கூத்திபாறை தமிழ்ப்பண்டிதர்
மகா-ள-ள-ஸ்ரீ மதுரகவி முத்துக்கிருஷ்ண ராமானுஜதாசர்.
இயற்றியது.

## விருத்தம்.

திருமகள் கமலத்தன்பு செய்திரிசிர புரத்தின்
அருகரின் வரகனேரியம்பதிய ருந்தவத்தைந்
தருநிகர் குழுமியானந்தப் பெருந்தகைமேற் சீர்சால்
பொருவில் பூந்துறையில் வேதநாயகப் புனிதன்மன்னே 1

வான்மணியிருளிரித்து மல்கொளிபரப்பாநின்று
தான்மணிற் பொருள்விளக் குந்தன்மைபோற்புலமையாற்றி
மான்மணி மெய்யுணர்த்தி மாட்சிசால் சிறப்பு நல்கும்
நான்மணிமாலையொன்று நரர்பெறநவிற்றினனே 2

## கலித்துறை.

விதிதனக்குப் பகர்வேதாந்த மார்க்கம் விரும்புபராங்
கதிதனக்குப்படி சன்மாம்புதிக்குக் கலமடைமைப்
பொதிதனக்குத் தமஞ்சீக்கு மென்றூழ்சிந்து பூந்துறையிற்
துதிதனக்குத்தகு சீர்வேதநாயகஞ் சொற்றொடையே 3

உ

சற்குருகடாக்ஷம்.

திருசிராப்பள்ளி டவுன்

வரகனேரி

# ஸ்ரீ குழுமியாநந்த சுவாமிகள்

# நான்மணிமாலை.

---

விநாயகர் வணக்கம்.

**கலித்துறை.**

பொன்னூர் வரக நகரோங்கிவாழ்வருள் பொற்பமைந்த
மின்னூர் பெரிய குழுமியாநந்த விமலனுக்குச்
சொன்னூர் சுகமமர் நான்மணிமாலை தொடுத்தணியத்
தென்னூர் செவந்தி விநயாகன் றூண்மலர் சிந்திப்பனே

வெண்பா.

குழுமியப்பக் கோமானே கோமளமாயுன்னைத்
தொழுமனத்தைத் தந்தருளைச் சொன்ன-செழுமையென
நான்மணிமாலைப்பா நவின்றுன்பொற் றாள்புனைய
வான்மணிமா வாக்குதவுவாய் 1

**கலித்துறை.**

வாதாதி வல்வினை யாவு மகல்வர்நின் மாட்சியுற்ற
பாதாம் புயத்தைப் பணிந்தேத்து மாந்தர் பரமகுரு
நாதா பெரிய குமிழி யருகுற்ற நண்பவெற்கோர்
ஆதார நீயென வந்தடைந் தேன்பிர மாநந்தமே 2

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மேலுலகோர் வியந்தேத்தும் வரக னேரி
மேவுமகா குழுமியா நந்த மேலோய்
மாலுறச்செய் பெண்ணாதி மோக மாய்க்கு
மாட்சியைநீ பெற்றவகை வழுத்தி னவ்வா
றேலுறயான் செய்வலைய மில்லை பேற்றை
யெய்திடுவேன் புண்ணியமுண் டுனக்கே யான்றோர்
நூலுணர்வு மஃதேயா நுவலக் கேண்மோ
தோன்றவிற் கடியவனா னுட்ப மீதே 3

## அகவல்.

தேவநதியாங் காவிரி வளஞ்சூழ்
திரிசிர புரத்தின் மருங்குற் றொளிரும்
மாசணு காச்சிவ நேசர்வாழ்ந் தோங்கும்
வரக னேரிப் புரமத னருகில்
விடதர நதிதரு மடைகுமி ழிக்கரைக்
கடுத்துநற் பொழில்சூழ்ந் திடுவரைப்* பமர்ந்த
குழுமியா நந்தன் கோவில் வலங்கொள்
அடியவ ரடிப்பொடி முடிபுனை மாக்க
டவத்தினி லோங்கிப் பவப்பிணி நீங்கி
இகபர சுகத்தை யகமகிழ்ந் துறுவதைக்
கண்டு கேட்டவை பண்டுளார் மொழிந்து
மொருகண் மெனினு முஞற்று† துழன் றனை
கொடியபாழ் நெஞ்சே தடிபோல் வாழ்ந்தனை
ஆக்கைத் தளர்வும் வீக்கிய நோயுமாத்
தளர்நடை சார்ந்தே வளம்பல துறந்து
பெருமூச் செய்திப் பொறிபுலன் சுழன் று
பிறந்திறந் தயர்வதை மறந்தனை கொல்லோ
வீணாட் போக்குதி வாணாட் குறுகின்
என்செய வல்லாய் பின்செய கில்லாய்
சாவதே திடமாமாவல்கள் முற்றறு
வாதலான் மணமே தீதணு காவகை
குழுமியா நந்தக் குருபரன் சந்நிதி
தொழுதுபல் காணுத் தழுதழுத் திடத்துதித்
தன்பு பெருக்கி லின்பு பெறுவையே 4

## வெண்பா.

வையம் புகழ்குழுமி மாதவனே நானுனக்குச்
செய்யும் பணியுளதோ செப்புவாய்-பையக்
கருவதன்கண் காத்தீர்த்துக் கற்பித்தாய் நீயே
யொருசெயலு மெற்கிலையன் றோ 5

## கலித்துறை.

ஓராது மெய்யரு ளுன்னா துழல்மன மோயும்வகை
பாராது மும்மையு மெய்தப் பயிற்றிடும் பாழ்வழுக்கள்

---

* வரைப்பு = எல்லை. † உஞற்றல் = செய்தல்.

சேரா தொலிகழ லென்சிரஞ் சூட்டித் திகைப்பொழியாய்
வீரா தனத்தெழு மேலோய் குழுமி விழுப்பொருளே 6

எண்சீர்க்கழில்நெடிலடியாசிரியவிருத்தம்.

பொருளல்லாப் பொருள்கணச்சிப் போற்றிநின்ற பாவி
புன்மையினற் புலைகொலைகள் புரிந்துநின்ற பாவி
அருளில்லா வசுரகுண மமைந்துகெட்ட பாவி
அன்பர்பணிக் கின்பமிலா தவமதித்த பாவி
தெருளல்லாச் சிற்றினத்தைச் சேர்ந்திருந்த பாவி
தெரிவையர்மீ தாசைமிஞ்சித் திரிந்தபெரும் பாவி
இருளில்லா தொளிர்மதியே குழுமியா நந்தா
இப்பாவிக் கருள்புரியி னேத்துமுனை யுலகே 7

அகவல்

உலகுக் கொருவனு யிலகுவ னவன்றான்
வலவன் வரனரன் வந்தித னவற்குப்
பலவித நாமம் பயின்றுள வளவில்
சொலுமதன் மாண்பித் துணையென வரிதால்
சிலவற்றையீண்டு தெரித்திடக் கேண்மோ
அளவிலாச் சோதி யமல பராபரன்
பூரணன் முத்தன் புரர்தனன் சித்தன்
காரணன் சுத்தன் கருத்தன் நிராமயன்
ஆரண சிரத்தி லமர்ந்திடு மீசன்
தாரணி தனிலுறுந் தாசருக் காக
போதக குருவாப் புவிக்கண் ணதனில்
வேதவே தாந்தம் விதிமுறை யாக
வானவர் தானவர் மானவர் போற்றி
வரங்கள்பெற் றார்க்க வந்தவ தரித்துத்
திரவை ராகச் சீர்த்தியை யுரைப்போன்
அவன்யா ரென்னி னருள்சுரந் தோங்குந்
தவராசர் வாழுந் தண்வளம் பொலியும்
உரக நதிக்கரை யுத்தர பாகம்
வரக னேரியாம் மாண்புறு நகரிற்
செவந்தி விநாயகர் திருத்தளி யமர்ந்து
பவப்பிணிக் காற்றுப் பக்குவர்க் கன்பாய்

தீட்சையே ழுவகைகொடு சாட்சியை யுணர்த்தி
மாட்சிமை யாற்றிய வள்ளலாம் பெரிய
குழுமியா நந்தக் குருபர ணமே
விழுமியோ ருரைத்தவை மெய்யென வுணர்ந்து
பத்திசெய் யாத பாழ்மனக் குரங்கே
புத்திர ராதியாம் புல்லரைக் கூடி
அற்ப சுகத்தி லாழ்ந்தறி விழந்தனை
கற்பதை மறந்து கருதிய திழந்து
விற்பன மின்றி வேடதா ரிகளைச்
சற்குரு வென்னச் சார்ந்தனை யவர்பால்
பெற்றவை பழுதென நற்றவ ரோதினுல்
கற்றறி வில்லாய் கதறிநாட் கழித்தனை
நாதனும் வேத நாயக மூர்த்தியாங்
குழுமியா நந்தக் குருபர னடிமலர்
நழுவ விடாம னற்பணி புரிந்தே
அன்னோ னடியா ரடிதொழு தேத்தின்
மறுகுத லில்லாய் இறுவரம் பதனி
லுறுபிணி நீங்கிப் பெறுவையின் னருளே

## வெண்பா.

அருளார்க்கு மன்பா மகமலர்ச்சி யுண்டாம்
இருள்சீக்கு மெய்ப்பொருளு மேயும்-மருடீர்
குழுமியா நந்தகுரு கோகனகத் தாளில்
வழுவிலாப் பத்திபுரி வாய் 9

## கலித்துறை.

புரிவாய் பலகள வேடம் புனைதல் பொருள்கவர
மரியாதை குன்றி யலைதியென் செய்தனை வஞ்சநெஞ்சே
பெரியார் துதிக்குங் குழுமிப் பிரான்பணி பேணிநித்தஞ்
சரியா யுயர்தவஞ் செய்துய்க வேறோர் தவமரிதே 10

## எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அரியநெறி பன்னூலு மறைந்து நேரில்
அகவுணர்வு பலசொலியு மந்தோ பாவம்
புரியவருந் தாதுவஞ்ச முட்பொ திந்து
பூசைபோற் கரைந்துகண்ணீ ருகுக்கும் பொல்லாப்

பெரியகுருத் துரோகிகளாம்* பிணைப்¶புற் கூட்டம்
பிரிந்துதிருத் தொண்டர்கள் சூழ்குமிழி யுற்ற
துரியநிலைக் குழுமியா நந்தன் பொற்றாட்
டொழுமடியார் பணிபுரியிற் றூயின்பிற்றே 11

அகவல்.

இன்பின் பெனவகந் துன்புறு நெஞ்சே
மகப்பயன் சுகமோ மற்றவன் றந்தையைப்
புவியிற் கோறல் †சவியுறக் கண்டாய்.
பவுத்திரர் சோதரர் பந்துமித் திரரும்
தந்நயங் கருதித் தாயப்பகைகொடு
பின்னப் படுத்தல் முன்னுற வறிந்தாய்
கோத்திரத் தெரிந்து சாத்திர முகமா
மணச்சடங் காற்றிப் பிணத்துவ மறியா
தணங்கெனக் கைப்பிடித் திணங்குபொற் றாலியைக்
கழுத்தினிற் கட்டி வழுத்திடு மனைவியோ
ரட்டியில் லாதுபட் டாதீயீந் திடினுஞ்
சம்மத மில்லாப் புன்மதத் தவர்போல்
விம்மல்செய் தரற்றிச் செம்மைபோற் கொஞ்சி
இருதயக் குறியை யருகரிற் றெரிந்தே
அருந்ததி யொப்பப் பொருந்தவே கூறிப்
பசப்பித் தனக்குள் ளிஸ்சப்பித்து நேரே
நிசமெனக் காண்பித் தசலிடம் பிடித்தே
அபிநயஞ் செயும்போ தாடவர் புத்திரர்
‡செத்துறி லங்ஙனே சத்தியஞ் சபதம்
பல்காற் கூறியும் பயன்படா தென்னில்
ஒல்கா தவர்தமைக் கொல்கொலை யாளர்போல்
சித்த மிரங்கா §தத்திசெய் மாதர்பால்
எத்தகைச் சுகமெய் தினையதை யிசைமோ
அத்தம் பெரும்பகை யாமென வான்றோர்
கைத்தகன் றோடிய கருத்தினை யோர்வாய்
இந்திராதி போகமு மிம்மைக் கதிகமாப்
பந்தப் படுத்தலும் பகைமுத லாதியாந்
துன்ப முறுத்தலுஞ் சுருதி யுரைக்குமே

* பிணை = பெண்பொது ¶ புல் = புலி ‡ செத்து = சந்தேகம்
† சவி = செவ்வையா § அத்தி = கொலை

என்புகவ் வியநா யின்பம் போலத்
தோற்றும் பிறப்பின் றுன்பமே யல்லாற்
போற்றுமின் புண்டெனல் சாற்றுபுன் மடமே
ஆதலா வினிச்சுக மாவதே தென்னில்
ஈதெலா மலவென் றியன்றவா தரமுடன்
சச்சிதா நந்த * சலதியின் மூழ்கிச்
சுகோதயம் பெற்ற சுகுணரோ டிணங்கி
மகோதய சுகமுறல் வனப்பது வாமே
அப்பெரி யாரை யறிதலு மரிதே
இப்புவ னியின்கண் ணிழிவேட தாரிகண்
மிகுத்துளா ரதனைப் பகுத்துணர்ந் தொழுகுதி
செகுத்துணர் வாழுந் திரிசிர புரஞ்சேர்
வரகநன் னகர்க்கண் வதிந்துயர் வள்ளல்
குரவ சிகாமணி குழுமியா நந்தன்
அடியார் பணிவிடை யகலா துஞற்றிப்
பத்திவை ராக்யம் பற்றுதி யெனினது
நித்திய வைக்கிய முத்தியை நல்குமே 12

வெண்பா.

நல்ல குழுமியா நந்தகுரு நாதன்சீர்
மல்கு திருநாமம் வாய்ந்துரைக்கில்-சொல்லரிய
சித்தசுத்தி யெய்திச் சிவாக்கிய மெய்ஞ்ஞான
முத்தியணி மைத்தா மொழி 13

கலித்துறை.

மொழிவதுன் ஞமம் முயல்வதுன்ருட்பணி முந்துறயான்
ருெழுவதுன் சேவை வலம்வரல்கோயில் துதியர்ச்சனை
இழுதுமிழ் பால்பழஞ் சுத்த விதயத்தி னின்றுவகை
யெழுவது னன்பு குழுமியா நந்தமெய் யீச்சுரனே 14

அறுசீர்க்கழில் நெடிலடியாசிரிய விருத்தம்.

சுரர்நரர் மூவராதி தோன்றமுக் குணத்த ராயின்
வரமிகு மூனையவ் வாறு வழுத்துத றகுமோ சுத்தப்
பிரமமென் றறைதல் வேதப் பெற்றியாற் சங்கை யில்லை
யரகர குழுமி யப்பா அடியவர்க் கன்புள் ளானே 15

---

* சலதி = சமுத்திரம்.

## அகவல்.

அன்பே சிவமென் ருரணங் கூறலால்
அன்புள் ளவரே யின்பம் பெறுவரால்
அன்புந் துவிதமா மென்பரவைதாம்
மாதுமைந் தர்கள்பால் காதலோ ரன்பே
ஆண்டவ னுடனே மாண்டகு குருபால்
பூண்டபே ரன்பும் புகல்வதோ ரன்பே
இவ்விரண் டனில்விட லெதுகொள லெதுவெனின்
அவ்வகை யினைச்சற் ருய்வதங் தறிவாம்
பெண்டுபிள் ளைகள்பால் கொண்டபே ராவல்
சண்டனுக் காக்கித் தண்டனை விதிக்குமே
வித்தக மன்றிது பித்தநீ கேட்டி
மழைபோற் கருணை பொழிகுரு வாதியைத்
துணையென நம்பி யிணைபிரி யாது
பணைகொடா வரம்போ லணைதல்சோ ராமல்
உடல்பொரு ளாவி திடமுற வீந்து
மடன்மலர்ப் பாதந் தொடர்தல் பின் னிடையாது
நிழல்போ லடுத்துக் குழவியா நிற்றலே
பழவினை போக்கிக் கழலிணை சேர்க்கும்
ஆயினிவ் வன்பே தாயினுஞ் சிறந்தது
சுதர்மமே யோங்கிப் பதமெலாங் கடந்து
இனியோர் காலுஞ் செனியா வாழ்க்கை
தனையே யுறுத ருனஃ தாதலின்
குருவழி நிற்றலே பொருளெனக் கருதிப்
பரவை மானும் பெரிய குமிழிக்
கரையை மேவுசீர் துரியா தீதக்
குழுமியா நந்த விழுமிய முனிவனைப்
பெற்றநற் றவரோ டுற்றவன் பொற்பணி
சற்றயர் வின்றித் தெற்றெனப் புரிகுக
இத்தவ நிகர்க்குமோர் மெய்த்தவ மிலையால்
சத்திய மிதுவெனப் புத்தியா லூகித்
தப்பெறுந் தவநெறிக் கெப்படி யாயினும்
செப்புமா வாக்கியந் தப்பற மொழிந்தே
பொற்புற வொழுகுதி மெய்ப்பதம் வரவே 16

## வெண்பா.

வருமே சுகவாழ்க்கை மாட்சிமைசேர் கல்லாற்
றருமே வடிகளருள் சாருந்-தெருளார்
பெரிய குழுமிப் பெருமானுக் கோவா
துரியபணி செய்வார்க் குவந்து 17

## கலித்துறை.

உவந்துனையர்ச்சித்து சேவைசெய் யாமலுயிரைநலி
பவந்தனை யீட்டிமின் ஞர்மயற் பட்டுழல் பாதகனேன்
றவந்தனைச் செய்யவல் லேனோ தளர்வெய்திச் சாவுறுமிவ்
வவந்த னைநீக்கினையன்றோ குழுமி யருட்கடலே 18

## பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

கடலை நிகர்க்கு முனைதுபுகழ் கருத்தி லிருத்தித் துதியாது
கபடங் களவு பொய்புரட்டுக் கணித்தற் கரிய கவர்சூதிற்
குடலைப் படைத்த நாரியர்பாலோடித் தேடிக் கூடியவ
ரோது மேவல் பலவுஞற்றி யுண்மை யிகந்து வெறியேறிச்
சுடலைகுறுகும் வரையறிவைச் சூறைவிட்டே யழிவேனைத்
தொண்டருவக்க வவர்பணிக்குந் தூய வேவன்முடிசூட்டி
விடலை நிகர்க்கும் வைராகம் மேவிக் களிக்கப் புரந்தருள்வாய்
விமலா குழுமி யானந்த வேதத் தலைவா விண்ணவனே 19

## அகவல்.

விண்ணவர் துதிக்கும் வேதநா யகனே
கண்ணக னுலகோர் கதிபெறக் கருதி
ஆவிற் பவித்த வருட்டிற வடிவே
மாவிற் பனர்க்குள் வயங்கிய சுடரே
குழுமியா னந்த குருபர மூர்த்தி
முழுமதிப் பெரியோர் முற்சென னங்களி
லுன்பாற் பெற்ற வுயர்தவ வலியா
லின்பா யுன்பணி யியற்றின ரென்றால்
நன்மையொன் றில்லா நாயினி விழிந்த
புன்மைய னெற்கது பொருந்திய தென்னை
முன்னைப் பயனல முளரிநின் பதங்களை
இந்நாட் டரிசனை யியற்றிய விசேடமாம்
வன்மையே வேண்டு முன்னது பெருமை
என்மனனப் புகல்வேன் அன்னையே போல்வாய்
அகோவகோ வென்ன வதிசய முற்றுச்
சுகாசுகங் கருதாச் சுத்த மனத்தனாய்
நின்னருட் சீரை நீயளித் தாயெனப்
பின்னமின் றன்பைப் பெருக்கிவாழ் குவனே 20

## வெண்பா.

வாழ்வதற்கு நல்ல வரமருளி யிப்புவியிற்
பாழவதிப் பட்டுழக்கு பாதகவல்-லூழ்வினைகள்
இப்பிறப்போ டேகிவிட வின்னருள்செய் யெண்குழுமி
யப்பவுனக் கன்பனென வாய்ந்து 21

## கலித்துறை.

ஆயா தறிவின்றி யந்தோ தனுவினை யாருயிரென்
றோயாத காலமஞ் ஞானிகள் போலுண்மை யோகியர்வீழ்
ந்ேதயானு பூதியை நம்பா துழன்றவிந் நீசனைக்கா
தூயா பெரிய குழுமியா நந்தமெய்ச் சுந்தரனே 22

## எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

சுந்தரஞ்சேர் ஞானசுக சுத்தசுயஞ் சோதி
துரியகுரு தேசிகனே குழுமியா நந்தா
மந்திரபஞ் சாக்கரனே மாதவனே நல்ல
மணியேபொன் னவமணியே ஞானசிகா மணியே
அந்தரத்தி லசைவின்றித் தனித்திருந்த வமயம்
அறைந்தமொழி மறப்பேனோ வகற்றியுதைத் திட்டுத்
தொந்தரவு செய்திடினும் விடுவேனோ தூயா
சொந்தமெனக் கைப்பிடித்துச் சுகங்கொடுப்பாய் துரையே 23

## அகவல்.

துரையே சிறியேன் சுழல்புல வழியாய்ப்
புரைவிரி வேலை புரிதன் மீக்கொண்டு
சரியையை முயலத் தகுதியே னல்லேன்
கிரியை யாற்றக் கிருத்திய மிகவுள
நெறிதவ றுறுவதா னேர்ந்திடத் திறமிலேன்
அரியயோ கம்பயின் றுர்த்திட லாமெனிற்
* சிரைமன் மொடுக்கத் திடமிலை தேரின்
இத்திரி விதத்தினு மெட்டரி தாயது
சத்தறி யாப்பல சமயபே தங்களும்
அணுகொணு ததுமற் றப்பொருள் சத்தியிற்
பரமெனுந் துரியமேற் பரஞான மென்பவால்
இந்தஞா னந்தா னெவ்வா றுறுமெனிற்

---

* சிரை = குரங்கு.

சுந்தரக் குரவன் றுணையடித் தொழும்பால்
வந்திடு மாந்தற் சுதந்தர முனக்கிலை
ஆதலால்
அரிபிர மாதிக ளறியொணு வந்நிலை
பிறிதுநோக் கில்லாப் பெரியார் சார்புற்
றறியலா மென்னி னப்பெரி யாரைக்
குறிகுண மறிந்து கூடுதல் வேண்டும்
எனெனின்
வேடமும் நீறு மெய்க்கண் மலிந்து
பாடல்கள் பலசொலிப் பணங்கவர் வழிக்குள்
ளொழித்துப் பசப்பி யுண்மைபோற் பலவா
வழுத்திடும் வஞ்ச மனுப்பதர் பலரே
இத்தக வினரென வெண்ணுற வேண்டின்
புத்திமுன் ஞகப் புகல்வதைக் கேண்மோ
அன்பர்க் கினியா னருள்கிரு பாகரன்
பொன்புவி யாசை புந்தியுட் பொதியான்
வரக னேரிப் பதி வனப்புட ஞேங்கி
யுரமுறக் கோயில் கொ ளொப்பிலாத் தேசிகன்
ஆசில் குழுமியா நந்த னவன்றமர்
பூசித பணியே புரத்தற் குரித்தாம்
வழியே நம்பி மனத்துணி வெய்தித்
தொழில்பிறி தின்றிச் சொற்றதைக் கருதி
அன்பு பெருக்கியவ் வருட்டிற நிற்றியேல்
இன்பு பெருகவந் தெய்துதல் திண்ணமே 24

### வேண்பா.

திண்ணங் குழுமியப்பச் சித்சொரூபப் பெம்மானை
வண்ணங்கொ டேத்தி மவுனமதா-யுண்ணிலவு
கால்துரியத் தூதிக் கனல்ககனத் துச்செலுத்த
சால்புதரு முத்தியைச்சார் தல் 25

### கலித்துறை.

சார்ந்துனைக் கிட்டித் தவம்புரிந் தேனிலை தையலரைச்
சேர்ந்து குலவி யுனையே நினைந்திலன் சீரியர்சொற்
றேர்ந்து களித்தில னிச்சிறியேன்சுகச் சீர்பொருந்தக்
கூர்ந்து ளபுத்தியுண் டாவதென் றேகுழு மிக்குருவே 26

### எழுசீர்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

குருபர னுவக்குஞ் செயலினைக் * குயிற்றிக்
கூறுநற் குணங்களுண் ணிரைத்துத்
திருகுறு வனிதை பார்வையைச் சீறிச்
சிட்டர்கட்கடிதொழு தேத்தின்
கருவரு பிரமா நந்தகை வல்யங்
கைமிசைத் திகழ்கனி யன்றோ
அருவுரு வாளா குழுமியா நந்தா
வடியனேற் கந்நிலை யருளே 27

அகவல்:

அருள்பெறக் கருதி யகில வாழ் வனைத்தும்
பொருளெனக் கருதாது பொன்போனெஞ்சக்
கேவல சகலக் கிளர்ச்சியை யொறுக்கி
ஆவல்கள் செகுத்துநின் னற்புதப் பதத்தினைத்
துதித்துநற் பதத்துறு தொண்டர்பொற் புரைத்தல்
கதிக்குறு வழியெனக் கதறிநெக் குருகிச்
சாத்திரக் குதர்க்கந் தவிர்ந்துனைத் துதிக்கப்
பாத்திர மில்லாக் காத்திர மெடுத்துழல்
பிச்சனைப் புரப்பதற் கிச்சைசெய் வாயேல்
துச்சவிவ் வுலக மெச்சமா யேசுமோ
எசினு முனக்கிழுக் கேதுறும் புகல்வாய்
ஆசிபல் கூறியே யருள்வள்ள லாமெனப்
பேசிப் புகழ்ந்துனைப் பெரியோர் துதிப்பரே
ஆதலால்
வரகனேரி மாண்பார் பதியோய்
உரக நதியோய் உயர்வொப் பிலாதோய்
குழுமியா நந்த குலகுரு மணியே
விழுமிய குணத்தோய் மேதகு சீரோய்
நாயின னாயினுஞ் சேயனென் றுணர்ந்து
தாயினு மினியனாய்த் தயைபுரி வாயென
நம்பிவந் தனனா லென்பவ மொழித்தே
வும்பரும் பரவுநல் லின்பந் தருவையே 28

வெண்பா.

தருவான் பரமகுரு சாமி குழுமிப்
பெருமான் றிருவடியைப் பேணில்-திருவொடுநாங்

---

* குயிற்றல் = செய்தல்

சென்னை-600 008.

கேட்டதெலாம் பெற்றுக் கிருதார்த்த மெய்ஞ்ஞான
நாட்டமுற்று வாழவுமே நன்கு 29

### கலித்துறை.

நன்றே பயிலு மவர்பா லிணங்கிநன் ஞட்டமுற்றே
ஒன்றே நினைந்துட னுனென் றேயுழன் றேதுவதைக்
கொன்றே* யிரண்டினை †மூன்றினை நீக்கிக் குவிந்து நெஞ்சம்
இன்றே சுகித்திடச் செய்வாய் குழுமியென் னீச்சுரனே 30

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஈசா விறைவா சர்வேசா எனையொப் பாரைக் கரையேற்று
நேசா குழுமி யாநந்த நிமலா நெஞ்சு ளார்ந்தொளிருந்
தேசா வரக னகர்வாசா சிந்தை யடக்கி யடியேனைப்
பாசா டவியைக் கடந்துய்யப் பணிப்பாய் பக்த வத்ஸலனே 31

### அகவல்.

சலன மிலாப்பர சாதன மோங்கக்
கலனம் பிறவாக் கடுவெளி காட்டுமென்
றுலகமு நூலு மொருங்கேயோதலால்
இலகுவழி யீதென விசைத்தற் குசாவவே
குருவரு ளின்றேற் குதர்க்க மேலிட்
டொருவழி யோரா துழல விடுமென
ஐயமி, லாதறிந் தனனற் றாக
செய்யுமா றேதெனிற் றிடவை ராக்கிய
வித்தக மேவுறும் புத்தியி னுயின்
செயத்தகு யாவும் செய்திடற் குரியவன்
விகித குருவென விநயமே லிட்டுப்
பகிர்முக நோக்கா தகமுக நோக்கி
அப்பால்
முற்றுெடர் பாலுறு மும்மலக் குப்பையைத்
தற்றெனத் துடைத்துச் சினமாசை லோபப்
பொற்றையை யகழ்ந்து பொறிவழிப் புலன்செலல்
தடுத்துமே சுகசா தனங்கொடு மனதைத்
தூய்மைய தாக்கித் துடிப்பை யகற்றி
வாய்மையா மாசனம் வனப்புட னமைத்துப்

---

* இரண்டு = யான் எனது

† மூன்று = ஈடணாத்திரயம் அஃது மண் பெண் பொன்

புத்தி விளக்கைப் பொலிந்திட வேற்றிச்
சுத்தமா வைத்துளேன் சுந்தரக் குழுமி
யாநந்த குருவே யானந்த மாவதில்
வீற்றிருந் திடுவையேல் வினைக ளெனைத்தொடாப்
பேற்றினை யுற்றுப் பிறப்பிறப் பொழிந்து
பாத்திர னாகிப் பணிந்தனு தினமுனைத்
தோத்திர மியற்றிச் சுகித்துவாழ் வேனே 32

## வெண்பா.

நேதித்து நன்னிலையி னின்ற குழுமியப்பன்
போதித்த வுண்மையினைப் போற்றியே-சோதித்துக்
கண்டா லறுந்துயர்போங் கன்னெஞ்சே பேதித்துக்
கொண்டாற் குறையலவோ கூறு 33

## கலித்துறை.

கூறுஞ் சுருதிக் கிலக்கா மதியைக் குறித்துணர்த்தி
நீறுங் கொடுத்து வரம்பல நல்கி நியமமிது
காறுங் கிளத்தியென் றெண்டுகொண் டாண்ட கருணையிற்கெவ்
வாறுங்கைம் மாறு குழுமியப் பாவில்லை மாநிலத்தே 34

## எண்சீரகழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நிலத்துதிக்கு முன்னும்பின்னும் நிலைபெறுத்துஞ் சோதி
நியமமறந் தகமமதை நினைந்துகெர்வித் துயர்ந்த
குலத்துதித்தோம் நிதிபடைத்தோ மெனமிகைச் சொற் கூறிக்
கூற்றுயிரைக் கொளப்பகட்டிற் குதித்துவரு முன்னம்
மலத்துதித்த கீடசுக மாமெனும்வாழ் வினைத்தும்
மதியாத பிரமசுக மாமவுன யோகத்
தலத்துதித்த வுபசாந்தி வந்துயவாண் டருள்வாய்
தற்பரனே குழுமியா நந்தசதா சிவமே 35

## அகவல்.

சதாசிவ புண்ணியந் தங்கிய சுகமமர்
சேனைடர் போற்றுஞ் சோண டாமின்னின்
ஆனனம் போல வவிர்ந்தொளிர்ந் தோங்கிச்
சுகந்தகுந் தளவல்லித்துணை வியைச்சிறப்ப
வுவந்திடப் பாகம் நவம்பெறத் தாங்கிய
மாதுர்பூ தேசுரர் காதல் கொளப்பெறு
திரிசிராப் பள்ளியைச் சேர்ந்தோர் பொலிந்த

திலதமே யென்ன விலகொளி யடைந்து
சர்ப்ப நதியுந் தடாககூ பங்களும்
மாப்பலாக் கமுகு மதியளா மற்றைய
தருக்களுந் தாமரை மருக்குலா மல்லிகை
சாதிசெங் கழுநீ ரோதுசீ ரிணர்களும்
கரிபரி தேரூர் காவண வீதியும்
மறையவ ருயர்ந்தோர் மாதவர் குழாஉக்களும்
ஏற்பவர்க் கிலையெனு தார்ப்பரித் துதவுஞ்
செல்வச் செருக்கருஞ் சீர்தரு வாணிபக்
குறைவிலா வூதியம் வரையறவடைந்து
மகிழ்ச்சியுற் றூர்க்கும் வணிகரு மமைந்த
வரக னேரி மாநகர்ப் பெருமை
உலகெலாம் பரவ வுயர்தவ சிரேஷ்டராய்
வீற்றிருந் தடியார் போற்றிசெய்தரச்
சாற்றிய வுயர்நெறி சாற்றுமெய்ப் பரம
குழுமியா நந்த குருபரா நாயேன்
றிரமுறு மொருமனுச்செய்குவல் கேண்மோ
நின்பெருந் திருவிழா நிகழுமந் நாளிற்
றேவரு மன்பருந் திரள்திரளாகவுன்
திருவமர் பந்தரிற் சிறந்தபே ரொலியுடன்
கைகுவித் தார்க்குங் காலையி லடியேன்
அவ்வா றன்புற் றரகர வென்னவும்
அடியவர் கணக்கி லடியனை யீற்றிற்
சேர்த்து வரைந்து சீருடன் படிக்கும்
போது செவிமடுத் தோதுதே காதியும்
புளகாங் கிப்பனுத் தழுதழுத் திடத்துதித்
தானந்த பரவச மாகியுண் மகிழவும்
திருவருட் பெருமைச் சீர்வர வருள்வையே 36

வெண்பா.

ஏதங் கருதா திருவென்ற லென்னெஞ்சம்
பேதங் கருதல் பிழையன்றோ-போதந்
தருகுழுமி யானந்த சாமி திருத்திக்
குருவழிபா டுள்ளவருள் கூர் 37

கலித்துறை.

கூற்றம் வருமுன்ன மச்சமி லாதுளங் கொக்கரித்தே
யூற்றம்பெற் றூர்க்குஞ் சுகசா தனத்திற மோங்கிமன

தேற்றம் பிறக்கக் கிருபைசெய் வாய்சிவ யோகநிலை
சாற்றும் பெரிய குழுமியப் பாகுரு தற்பரனே 38

## எண்சீர்கழி னெடிலடியாசிரிய விருத்தம்.

தற்பரவிஸ் வாதீத சாந்தமக தேவா
தாசருக்கும் நேசருக்குந் தாரகநீ யன்றோ
கற்புறுநெஞ் சினருவந்து காதலிக்குங் கணவா
கசடரையுஞ் சீர்படுத்திக்கரையேற்று முனிவா
சிற்பரகு ணாதீத குழுமியா நந்தா
சிறியனெற்கோர் வரமளிப்பாய் சீரியரைக்கூடிப்
பொற்புறவென் னுளுமுன தடியரடிப் பணியை
புரியவைப்பா யிதுபோதும் புண்ணியப்பூந் தருவே 39

## அகவல்.

தருமன் வருமுன் பருவரற் கேதுவாங்
காம முதலறு கடும்பகை துடைத்து
மைத்திரி முதனான்கும் வைத்திரு தய்த்தே
அமானித் வாதிபுமானி னிலக்கணத்
தொகுதியைப் பேணல் தகுதியென் றோர்ந்து
திரிகர ணங்களும் பரிபூ ரணமாப்
பத்திசெய் முன்னோ ருத்தம நெறியை
யணுத்துணை யேனுங் குணத்தொடு மருவா
மடமைபெற் றுள்ள கடையனிற் கடையேன்
சுத்தனன் றெனினும் பத்திமை நாடி
இறைஞ்சில னெனினும் வருந்தில னெனினும்
எத்தில னெனினும் வாழ்த்தில னெனினுஞ்
சர்வக் ஞாதி சட்குண நிறைந்து
கர்த்தத் வாதிசா மர்த்திய மூன்றும்
பொருந்தித் திருவருள் சுரந்துள வன்றோ
சிறந்தொளி கொழிக்குஞ் சீர்மலி தெய்வக்
குருவடி வான குழுமியா நந்தா
ஒருகண மாவதுன் றிருவுரு வதனை
நெஞ்ச நினைந்தது வஞ்சக மிலையே
நின்னுடைப் பணியை யுன்னருள் பெற்றே
புரிந்தன னறிந்தே யிருந்தனை நீயே
மேலும்

## நான்மணிமாலை.

சீர்மலி யுலகந் தேர்வுற வென்னையுன்
மகவெனக் கூறுந் தகைமையிற் சிறந்ததும்
பொய்யதோ கண்டா யையநின் னடைக்கலம்
ஆதலின்
தெரிந்துசெய் பிழையோ தெரியாப் பிழையோ
எப்பிழையும்பொறுத் தொப்புர வாக்கி
யுவமான மில்லாச் சிவஞா னச்சீர்
கொடுத்தடித் துணைநல மடுத்திற மாப்ப
அடுத்தெனை யாள்வா யருள்குழு மலையே

நான்மணிமாலை முற்றிற்று.

ஓம்தத்ஸத்.

172841